# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 203/2020

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள்,

Deposition of **PW– 1** solemnly affirmed in accordance with the provisions of Evidence Act, X of 1972, this the 13th day of October, 2023.

| | |
|---|---|
| பெயர் : திரு. கண்ணன் (எ) கந்தசாமி | கிராமம் : |
| த/பெ. : திரு. முத்துப்பிள்ளை | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

**முதல்விசாரணை**:–

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரதிவாதிகளுடன் நான் தாவா சொத்தைக் குறித்து 05.02.2020ம் தேதி ஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்படாத விற்பனை உடன்படிக்கை ஆவணம் – **வா.சா.ஆ.–1**. 1ம் பிரதிவாதி என்னிடம் 23.04.2020ம் தேதி ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டு செய்த மேற்குறிப்பு – **வா.சா.ஆ.–2**. 1ம் பிரதிவாதி அருணாச்சலத்தின் பெயரில் உள்ள 27.05.2019 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.–3**.

பிரதிவாதிகளுக்கு நான் வழக்குரைஞர் மூலம் 04.08.2020ம் தேதி அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் – **வா.சா.ஆ.–4**. பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் முறையே **வா.சா.ஆ.–5, 6 மற்றும் 7**. பிரதிவாதிகள் எனது வழக்குரைஞருக்கு அனுப்பிய 08.08.2020ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு – **வா.சா.ஆ.–8**. எனது வங்கி கணக்கின் பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.–9**.

( பிரதிவாதிகள் ஆஜரில் இல்லை. எடுத்துரைப்பும் இல்லை. குறுக்குவிசாரணை இல்லை. )

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.